| | |
|---|---|
| | **பொள்ளாச்சி நகராட்சி**<br>**30.07.2021 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில்**<br>**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**<br>**தீர்மான எண். 2943 முதல் 2994 முடிய** |
| **2943)** | பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கையாக நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் அலுவலகங்கள் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் புகைமருந்து அடிக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தி பைரீத்திரம் 2% மருந்து தெளிக்க பயன்படும் இயந்திரங்கள் (Fogging Machine) பழுதடைந்து உள்ளதால் வாகனத்தில் பொருத்தும் புகைமருந்து அடிக்கும் இயந்திரம் (Vechile Mount Machine) புதியது 1 எண்ணம், மற்றும் புதிய Pulse Fogging Machine 2 எண்ணம் கொள்முதல் செய்யும் பணிக்கு 01.07.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br>ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு:<br><table><tr><th>வ. எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை ரூ.</th></tr><tr><td>1.</td><td>சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மேன்ட் சர்வீஸ்<br>12/182C, அப்பட்டுவிளை, கூடடமாவு,<br>முளகுமூடு<br>கன்னியாகுமரி - 629167</td><td>5,60,000/-</td></tr><tr><td>2.</td><td>அருணை கம்ப்யூட்டர்ஸ் பார்ம்ஸ்,<br>பிள்ளையார் கோவில் வீதி,<br>வாணியம்பாடி,<br>வேலூர் - 635752</td><td>6,45,000/-</td></tr></table><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மேன்ட் சர்வீஸ், 12/182C, அப்பட்டுவிளை, கூட்டமாவு, முளகுமூடு, கன்னியாகுமரி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.5612/2018/எச்2 |
| **2944)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான பொறியர் பிரிவில் தெருவிளக்கு பராமரிப்பு இயங்கும் வாகன எண்: TN 41 E 0192 வாகனத்தின் தகுதிசான்றிதழ் புதுப்பித்தல் பணி மற்றும் பழுது சரிசெய்யும் பணி 02.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><table><tr><td>1</td><td>M/S: JD&CO, பொள்ளாச்சி</td><td>ரூ.1,32,160 /- (வரிகள் உட்பட)</td></tr><tr><td>2</td><td>குருவாயூரப்பன் ஆட்டோ மொபைல்ஸ், பொள்ளாச்சி.</td><td>ரூ.1,41,482/- (வரிகள் உட்பட)</td></tr></table><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள M/S:JD&CO, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு |

| | |
|---|---|
| | **1. இப்பணிக்கு ஆகும் செலவினம் ரூ.1,50,000/- க்கு நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.**<br>**2. வரப்பெற்றதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S: JD&CO, பொள்ளாச்சி அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**<br>**3. பணியின் அவசர அவசியம் கருதி, நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.** |
| **2945)** | **நகராட்சிக்கு சொந்தமான அண்ணா கூடுதல் பேருந்து நிலையம் முதல் தள கடை எண்.8 திருமதி.சாந்தாமணி என்பவருக்கு 01.10.2012 முதல் 30.09.2021 வரையிலான 9 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அன்னாரின் கணவருக்கு உடல்நிலை சரியில்லாததால் கடையினை நடத்திட இயலாது என்பதால் 01.10.2021 முதல் உரிமம் நீட்டிப்பு செய்து வழங்க வேண்டாம் எனவும் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக விண்ணப்பித்துள்ளதால் இக்கடையின் குத்தகை உரிமத்தினை 01.10.2021 முதல் ரத்து செய்து பொது ஏல நடவடிக்கைகள் மேற்கொண்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தித்தாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.**<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. **மன்றம் அனுமதிக்கலாம்**<br>**ந.க.எண்.1131/2020/அ6** |
| **2946)** | தமிழகத்தில் கொரோனா இரண்டாம் அலை வெகு விரைவாக தொற்று பரவிவருவதால் பாதிப்போர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்கான சிகிக்சைகள் மேற்கொள்ள மருத்துவமனைகளில் உள்ள படுக்கை வசதிகள் போதுமானதாக இல்லாததால், கூடுதல் படுக்கை மையங்களை உருவாக்கிட வேண்டியுள்ளது. **11.05.2021** அன்று சார் ஆட்சியர், பொள்ளாச்சி அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில், தற்போது நிலவும் சூழ்நிலையில் கொரோனா சிகிச்சைக்கான படுக்கைகள் பற்றாக்குறை ஏற்படுவதால், நகராட்சியின் கோட்டூர் ரோடு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கொரோனா சிகிச்சைக்கான கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்திட தெரிவித்துள்ளார்.<br><br>இப்பள்ளியில் இருதளங்கள் உள்ளதில் ஒரு பகுதியில் ஆண்களுக்கும், மற்றொரு பகுதியில் பெண்களுக்குமான படுக்கை வசதிகள் அமைக்க வேண்டியுள்ளது. மருத்துவ சிகிச்சைக்கு ஏற்றவாறு தற்போது உள்ள விளக்குகள் மற்றும் மின் வசதிகளுடன் கூடுதலாக மின் விளக்குகள் மற்றும் மின்விசிறிகள், வெளிப்புற விளக்குகள் (Focus lights) அமைக்க வேண்டியுள்ளது. இதன்படி கீழ்கண்ட கூடுதலாக மின் வசதிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br><br>1) 20W LED 4ft light – 30 Nos,<br>2) 48" ceiling fan - 30 nos,<br>3) 80W LED Focus light – 4 Nos,<br><br>மேற்காண் வசதிகளை மேற்கொள்ளும் பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. இப்பணியினை மேற்கொள்ள ரூ **1.60** இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சிகளின் விதிகளின் **section-15** கீழ் அனுமதிக்கப்பட்டு, விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் விவரம்<br><br>1) M/s Light Zone, Pollachi - 0.26% மதிப்பிட்டை விட குறைவு<br>2) M/s Classic Engineering Enterprises, Coimbatore - 0.43 % மதிப்பிட்டை விட அதிகம்<br>3) M/s Dhandapani & Co, Pollachi - 1.38% மதிப்பிட்டை விட அதிகம்<br><br>மேற்காண் விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/s Light Zone, Pollachi நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி |

| | |
|---|---|
| | முடிக்கப்பட்டு, இயங்கி வருவதாலும், இதற்கான பட்டியல் தொகை வழங்கும் மேற்கொண்ட நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் பதிவு செய்யலாம். |
| **2947)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14, S.R லேஅவுட் முகப்பு மற்றும் வார்டு எண்.16, சுப்பிரமணியம் கோவில் வீதி ஆகிய வீதிகளில் சிறுபாலங்கள் மற்றும் வடிகால் பல வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டவையாகும்.<br>சிறுபாலங்கள் அமைக்கப்பட்டு, பல வருடங்கள் ஆவதால் கழிவுகள் தேங்கி அடைப்பு ஏற்பட்டதால், கழிவு நீர் செல்லமுடியாமல் இருபுறம் தேங்கிய நிலை ஏற்படுகிறது. அதிகப்படியாக தேங்கும் கழிவு நீரானது சாலைப்பகுதிகளில் வழிந்தோடுவதால், பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகள் சாலையை கடக்க முடியாமல் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். மேலும், கழிவு நீர் தேங்குவதால், சுகாதாரகேடு விளைவதோடு அருகில் வசிக்கும் பொதுமக்கள், பெரியோர்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.<br>பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் நலனில் அக்கறைக் கொண்டும், சுகாதார கேடு விளைவதை தடுக்கும் பொருட்டும், பழுதடைந்த சிறுபாலங்கள் மற்றும் வடிகாலினை அகற்றி விட்டு, புதியதாக சிறுபாலங்கள் மற்றும் வடிகால் அமைக்க வேண்டியுள்ளது.<br>எனவே, மேற்காணும் வீதிகளில் புதியதாக சிறுபாலங்கள் மற்றும் வடிகால் அமைக்க ரூ.12.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **2948)** | பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண் 35-ல் உள்ள சங்கரர் வீதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் தற்சமயம் இல்லாததால் அந்தப் பகுதியில் சேகரமாகும் மழைநீர் மற்றும் கழிவுநீர் போன்றவைகள் சாலையிலேயே செல்வதால் வாகன ஓட்டிகளுக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட சாலையில் புதிதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு ரூ.4.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **2949)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான மகாலிங்கபுரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் குடிநீர் ஏற்றம் செய்யப்பட்டும் 300 mm CI Sulice Valve (Inlet Valve) மற்றும் குடிநீர் விநியோகம் செய்யப்படும் 300 mm CI Sulice Valve (Outlet valve) ஆகியவைகள் சுமார் 30 வருடங்களாக இயக்கப்பட்டு வந்துள்ளதால் தற்சமயம் அவ்வால்வுகளால் தேய்மானம் ஏற்பட்டு பழுது நீக்கம் செய்ய இயலாத வகையில் நீர்க்கசிவு ஏற்படுகிறது இதனால் குடிநீர் விரயம் ஏற்படுவதுடன் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படுவது தடை ஏற்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட இரண்டு வால்வுகளையும் அகற்றி புதிதாக 300 mm விட்டமுள்ள DI Sulice Valve களையும், மேலும், அம்மனீஸ்வரன் கோவில் வீதியில் பழுதான குடிநீர் விநியோக 200 mm CI Sulice Valve களை புதிதாக மாற்றி அமைப்பதன் மூலம் குடிநீர் விரயமின்றி சீரான விநியோகம் செய்யலாம். எனவே இப்பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

<table>
<tr><td></td><td><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td>2950)</td><td>பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட, மணியகாரத் தோட்டம் பகுதியில் வசித்து வரும் திரு.S.செல்வகுமார் என்பவர் மான்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.no:13392/2021ல் நகராட்சி ஆணையர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக ஆஜராக அரசு வழக்கறிஞர் திரு.V.P.R.இளம்பரிதி என்பவரை நியமிக்கவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2775/2021/ஜி1</td></tr>
<tr><td>2951)</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்பட்டு வரும் வாகனம் எண்.TN 41 AE 3843 (டிப்பர்) வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்து தகுதிச் சான்று பெறும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.2424/2021/எச்2</td></tr>
<tr><td>2952)</td><td>பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான மாட்டுச்சந்தை வளாகம் மார்க்கெட் சாலையில் செயல்பட்டு வருகிறது.<br>மாட்டுச் சந்தையின் வருமானத்தைப் பெருக்கும் வகையிலும், சந்தைக்கு வந்து போகும் வியாபாரிகள் வசதிகளுக்காகவும் கீழ்க்கண்ட வேலைகளை செய்து தர வேண்டியுள்ளது.<br>பணிகளின் விபரம்:<br>1. இயற்கை பேரிடர் காலங்கள் அதாவது மழை மற்றும் வெய்யில் காலங்களில் சந்தைக்கு வரும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் மேற்காணும் பிரச்சனைகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு தங்கும் கூடாரம் (GI Sheet Roofing) அமைக்க வேண்டியுள்ளது.<br>2. மாட்டுச்சந்தை வளாகத்திற்கு வந்து செல்லும் வியாபாரிகள், தங்கும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தி தரவேண்டியுள்ளது.<br>எனவே, நகராட்சியின் வருமானத்தைப் பெருக்கும் வகையிலும் மற்றும் வியாபாரிகள் பொதுமக்கள் நலன் கருதியும், மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.4.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி, முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 3014/2021/இ1</td></tr>
<tr><td>2953)</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் மராமத்து பணி மேற்கொண்டு புதுப்பித்தல் பணிக்கு ரூ.14.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு 08.07.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<table><tr><td>1.</td><td>திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03%</td></tr></table></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | குறைவு. |
| 2. | திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.88% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:2429/2021/இ1

**2954)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண். 22, 23 மற்றும் 26 ஆகிய கடைகளின் பழுதடைந்த ரோலிங் சட்டர்களை அகற்றிவிட்டு புதிதாக பொருத்துதல் பணிக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 14.07.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.21% குறைவு. |
| 2. | திரு.சி.ராமகிருஷ்ணன், கோட்டூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.19% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.21% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.21% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 1131/2020/அ6

**2955)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட, மகாலிங்கபுரம் மனைப்பிரிவு, காமராஜர் வீதி, நேரு வீதி, ரவுண்ட் ரோடு, பாரதி வீதி மற்றும் புதிய திட்ட சாலை ஆகிய இடங்களில் உள்ள வணிக கட்டிடங்கள் தொடர்பாக வாதி திரு.J.கிருஷ்ணகுமார் என்பவரால், மாண்பமை, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு WP.No: 3995/2019 மற்றும் Contempt petition No: 22/2021ல் நகராட்சி ஆணையர் அவர்களை 3-ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக

| | |
|---|---|
| | **ஆஜராக மூத்த வழக்கறிஞர் திரு.P.வில்சன் என்பவருக்கான வழக்குக்கான கட்டணம் ரூ.45,000/- மற்றும் மாண்பமை, சென்னை உயர்நீதிமன்ற 09.07.2021ம் தேதிய உத்திரவின்படி Advocate Commissioner திரு.A.V.ஆறுமுகம் அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய தொகை ரூ.50,000/- வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. **பணியின் அவசர அவசியம் கருதி தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண்: 3272/2019/ஜி1** |
| **2956)** | பொள்ளாச்சி நகராட்சியில் பணிபுரிந்த முன்னாள் ஆணையாளர் திருமதி. A.சுந்தராம்பாள் அவர்கள் தனது பதவி உயர்வு தடைப்பட்டமைக்கு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு துறை, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் பொள்ளாச்சி நகராட்சி மீது W.P.No.7813/2021ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார்.<br>மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராக திரு.ஆதிமூலப்பாண்டியன், வழக்கறிஞர், மதுரை என்பவர் ஏற்று நடத்தியதை ஏற்றும், மேற்படி வழக்கிற்காக ஆகும் செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கைகள் மேற்கொண்டவைகளையும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.<br>**ந.க.எண்.1816/2021/சி1** |
| **2957)** | நகராட்சிக்கு சொந்தமான தேர்நிலை பழையகடை எண்.5க்கு 06.02.2020ல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.எ.சலீம் என்பவரின் மாதவாடகை தொகை ரூ.5000/–த்திற்கான ஒப்பந்தப்புள்ளி நகர்மன்றத் தீர்மான எண்.2124, நாள்25.02.2020ல் ஏற்கப்பட்டு 12 மாத வாடகை முன்பணத் தொகை ரூ.60,000/– செலுத்திட தெரிவித்து 30.03.2020, 03.07.2020, 03.09.2020, 07.10.2020 மற்றும் 23.12.2020 ஆகிய நாட்களில் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டும் நாளது தேதிவரையில் தொகை செலுத்தப்படவில்லை. எனவே அன்னார் சமர்ப்பித்துள்ள 06.02.2020ம் நாளிட்ட ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து பொது ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திரு.சலீம், என்பவர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.35,000/– பறிமுதல் செய்து நகராட்சி பொதுநிதியில் சேர்க்கலாம்.<br>**ந.க.எண்.1131/2020/அ6** |
| **2958)** | நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களின் குத்தகை இனத்தில் வசூல் செய்யப்படும் சேவை வரி மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் சேவை வரித் தொகையானது 01.07.2021 முதல் மத்திய அரசால் சரக்கு மற்றும் சேவை வரி தொகையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் சரக்கு மற்றும் சேவை வரி தொகை செலுத்துவதற்கான சலான் தயார் செய்தும், சரக்கு மற்றும் சேவை வரி துறையில் கணக்கு தாக்கல் செய்து வழங்குவதற்கான செலவினங்கள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.531, நாள் 31.10.2017ல் ஒப்புதல் பெறப்பட்டு வரியில்லா இனங்களில் வசூல் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் சேவை வரி தொகையினை செலுத்துவதற்கான சலான் தயார் செய்து வழங்கிடவும், அதற்கான கணக்கினை சரக்கு மற்றும் சேவை வரித்துறை அலுவலகத்தில் தாக்கல் செய்திடவும் SOLVEAZY SOLUTION நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதில் ஏற்கனவே கணக்கு தாக்கல் செய்வதற்கு வழங்கப்பட்டு வரும் கட்டணத் தொகை (Consultant fee) ரூ.2500 + ரூ.2500 மற்றும் அதற்கான 18% சரக்கு மற்றும் சேவை வரியுடன் சேர்த்து ரூ.2950 + ரூ.2950 கட்டணத் தொகையிலேயே ஜுலை 2021 முதல் பிரதி மாதமும் சலான் தயார் செய்வதற்கு மற்றும் அதற்கான கணக்கு தாக்கல் செய்வதற்கு தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள சால்வு ஈஸி சொல்யூசன் (SOLVEAZY SOLUTION) நிறுவனத்தின் இசைவு கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. வரியில்லா இனங்களில் வசூல் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் சேவை வரி தொகைக்கு சலான் தயார் செய்து வழங்கிடவும் அதற்கான கணக்கு தாக்கல் செய்வதற்கும் ஏற்கனவே M/s.SOLVEAZY SOLUTION நிறுவனத்திற்கு கட்டணத் தொகை ரூ.2500 + ரூ.2500 மற்றும் அதற்கான 18% சரக்கு மற்றும் சேவை வரியுடன் சேர்த்து ரூ.2950 + ரூ.2950 வழங்கப்பட்டு வரும் தொகையிலேயே ஜுலை 2021 முதல் தொடர்ந்து பணி மேற்கொள்ள M/s.SOLVEAZY SOLUTION நிறுவனம் வழங்கியுள்ள இசைவு கடிதத்தினை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண்.1039/2020/அ6** |
| **2959)** | சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு WP எண்.769/2017–ல் திரு.தங்கராஜ்பிரபு என்பவர் காந்தி மார்க்கெட் A பிளாக் கடை எண்.18 குத்தகைக்கு எடுத்து மாத வாடகை தொகை ரூ.3581/– செலுத்தப்பட்டு வந்துள்ளதை 9 ஆண்டுகள் முடிவுற்ற காரணத்தால் சந்தை மதிப்பின்படி 01.04.2016 முதல் மாத வாடகை தொகை ரூ.8000/– ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்துள்ளதாகவும் அன்னார் செலுத்தியுள்ள வைப்புத் தொகையினை திரும்ப வழங்கக் கோரி நகராட்சியின் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் நகராட்சியின் சார்பாக திரு.ஆனந்த் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்திடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2940/2021/அ6** |
| **2960)** | பொள்ளாச்சி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் ஓட்டுநராக பணிபுரிந்து வரும் திரு.ஆர்.செல்வராஜ் மற்றும் திரு.ஆர்.வெள்ளிங்கிரி என்பவர்கள் 20 வருடங்கள் மாசற்றமுறையில் ஓட்டுநர் பணியில் பணிபுரிந்தமைக்காக தங்கப்பதக்கம் தலா 4 கிராம் இருவருக்கும் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.24817/ஜே3/2020, நாள்–13.07.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்கப்பதக்கம் இயக்குநர் எழுதுபொருள் மற்றும் அச்சக்ததுறை சென்னை அவர்களிடம் இருந்து பெற்று வழங்கவும் அதற்காகும் செலவினத் தொகை நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எழுதுபொருள் அச்சகத்துறை சென்னையில் இருந்து வரப்பெற்ற கடிதத்தில் அன்றைய சந்தை மதிப்பில் ரூ.51000/– எனவும் வங்கி வரைவோலை மூலம் அனுப்பவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிகுதி தொகை தங்கப்பதக்கம் பெறப்படும் அன்று வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தங்கப்பதக்கத்திற்கு ஆகும் செலவினத் தொகை அனைத்தும் நகராட்சி பொதுநிதியில் இருந்த வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.3038/2021/எச்1** |
| **2961)** | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்பட்டு வரும் வாகனம் எண்.TN 41 AH 2012 (டிப்பர்) வாகனத்திற்கு புதிய டயர் டியூப் மாற்றம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,25,000/–திற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.3183/2021/எச்2** |
| **2962)** | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்பட்டு வரும் வாகன எண். TN 41 AM 2687 (டிப்பர்) வாகனத்திற்கு பழுதுகள் நீக்கம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.3160/2021/எச்2** |
| **2963)** | **பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான நாச்சிமுத்து பிரசவ விடுதி அருகில் நகராட்சி நிதி நிலைமையினை மேம்படுத்தும் நோக்கில் காலியிடத்தில் பொதுமக்கள் நன்மைக்காக இருசக்கர வாகனம் நிறுத்தும் இடமாக அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.583 நாள் 28.09.2012ல்அனுமதிஅளிக்கப்பட்டுள்ளது.**<br>**மேற்கண்ட அனுமதியினை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மானம் எண்.773 நாள் 23.11.2012ல் இருசக்கரவாகனம் நிறுத்துவதற்கு ஒன்றுக்கு ரூ8/- ஆக கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் முதலில் ரூ.1,62,000/-க்கு ஏலம் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில் குத்தகை காலம் முடிவுற்று அதன்பின்பு 01.02.2019ல் ரூ.20,82,000/-க்கு போட்டியின் பேரில் ஏலத்திற்கு விடப்பட்டு தொடர்ந்து ஏலம் எடுத்து வந்த நிலையில் மூன்றாவது காலத்தில் ஏலம் எடுத்தவர் பெரும் நிதி இழப்பு என்று ஏலத்தொகையிலிருந்து சில மாதங்களுக்கு குறைத்து வழங்கக் கோரி அதனை நகராட்சி நிர்வாகம் ஏற்றுக்கொள்ளாததால் ஏலதாரர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததில் மேற்படி வழக்கு எண்.12557/2021 நாள் 11.06.2021ல் தீர்ப்பில் நிலுவை குத்தகை தொகையினை உடனடியாக செலுத்த தவறினால் பொது ஏலம் கோர தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**<br>**அதன் பின்பு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கடந்த ஆண்டு குத்தகை ரூ.22,95,405/க்கு தற்சமயம் ரூ.14,75,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இத்தொகை மிகவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி ஆகும். மேலும் 01.02.2019 அன்று போட்டியின் காரணமாக ரூ.20,82,000/- எடுத்து ஏலதாரர் மிகவும் நஷ்டப்பட்டுவிட்டதாலும், தற்சமயம் மிகவும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள் நகராட்சி நிதிநிலைமையின் மேம்படுத்தும் வகையில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.773, நாள் 23.11.2012ல் வாகனம் ஒன்றுக்கு ரூ.8/- ஆக நிர்ணயித்த கட்டணத்தினை ரூ.15/- உயர்வு செய்தால் உயர்ந்த ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவாய்ப்புள்ளதால் மேற்படி கட்டணத்தினை ரூ.15/- ஆக உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.**<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. **இரண்டு சக்கர வாகன நிறுத்தம் நாள் ஒன்றுக்கு கட்டணம் ரூ.8/- லிருந்து ரூ.15/- ஆக உயர்வு செய்வதற்கு பொது மக்களின் ஆட்சேபனையின்மையினை பெறும் பொருட்டு தினசரி செய்தித்தாளில் வெளியிடலாம் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண்.5035/2020/அ6** |
| **2964)** | **பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான காந்தி வாரச் சந்தையில் உள்ள (மாட்டுச் சந்தை) நுழைவாயில்களில் சங்கம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை இனமானது. 01.05.2018 முதல் 31.03.2021 வரையிலான காலத்திற்கு திரு.நாச்சிமுத்து என்பவருக்கு ஆண்டு குத்தகை தொகைக்கு ரூ.56,29,478/-க்கு குத்தகைக்கு விடப்பட்டு 29.11.2018 முதல் நான்கு வாரங்கள் கோமாரி நோயின் காரணமாக கால்நடை சந்தையினை நிறுத்தி வைக்க மாவட்ட ஆட்சித்தலைவர். கோவை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**<br>**இந்நிலையில் குத்தகைதாரர் திரு.வி.எம். நாச்சிமுத்து என்பவர் திப்பம்பட்டி ஊராட்சி பகுதியில் தனியார் இடத்தில் திரு.ஆறுச்சாமி என்பவரால் மாட்டுச்சந்தை புதியதாக அமைத்து நடத்தப்படுவதால் பொள்ளாச்சி நகராட்சி சந்தைக்கு மாடுகள் ஏதும் வருவதில்லை என்பதால் திப்பம்பட்டி ஊராட்சி பகுதியில் அனுமதியின்றி செயல்படும் மாட்டு சந்தையினை தடை செய்ய கோரி சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு wp எண்.970/2019 மற்றும் wmp எண்.1082/2019ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது.**<br>**மேற்காண் வழக்கின் 27.02.2019ம் நாளிட்ட நீதிமன்ற உத்தரவில் திப்பம்பட்டி ஊராட்சி பகுதியில் அனுமதியின்றி நடத்தப்படும் மாட்டு சந்தையின் மீது ஒரு வார காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் கோவை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர். திப்பம்பட்டி ஊராட்சி ஆகியோர்களுக்கு உத்திரவிடப்பட்டும் மாட்டு சந்தையானது தொடர்ந்து திப்பம்பட்டியில் நடைபெற்று** |

வந்ததால் சென்னை உயர்நிதி மன்றம் Wp எண்793/2019 மற்றும் cmp எண் 6247.2019 நிதி மன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டதில் மாவட்ட ஆட்சியர் கோவை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் திப்பம்பட்டி ஊராட்சி பகுதியில் அனுமதியின்றி நடத்தப்படும் மாட்டுச்சந்தையின் மீது ஏழு தனி நீதிபதியால் வழங்கப்பட்ட உத்தரவின் படி நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

கோமாரி நோய் காரணமாகவும், அனுமதியின்றி திப்பம்பட்டி ஊராட்சி பகுதியில் புதிதாக மாட்டுசந்தை நடை பெறுவதாலும் சென்னை உயர்நீதி மன்றம் உத்திரவின் படி மாவட்ட நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் குத்தகைக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதால் குத்தகை உரிமத்தினை ரத்து செய்திட கேட்டு கொண்டதன்படி 01.06.2019 முதல் குத்தகை உரிமம் ரத்து செய்ய பட்டுள்ளது.

காந்தி வாரச் சந்தையில் நுழைவாயில்களில் சுங்கம் வசூல் உரிமத்திற்கு 01.06.2019 முதல் கீழ்க்கண்ட பணியாளர்களை ஓதுக்கிடு செய்து இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 2190.2019.அ6 நாள் 31.05.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் | பதவி | மாத ஊதியம் |
|---|---|---|---|
| 1 | திரு.நாச்சிமுத்து | இ.நி, உதவியாளர் | 34326 |
| 2 | திரு.கதிர்வேல் | இ.நி. உதவியாளர் | 46358 |
| 3 | திரு.குமரேசன் | காவலர் | 31184 |
| 4 | திரு.மாரியப்பன் | காவலர் | 31184 |
| 5 | திரு.திருமூர்த்தி | தோட்டகாரர் | 32856 |

மேற்காண் பணியாளர்களை கொண்டு துறை மூலம் வசூல் பணி மேற்கொண்டு வருவதில் மாடுகள் ஏதும் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டுவரப்படவில்லை. இதில் கொரோனாவும் ஒரு காரணமாகும். இந்நிலையில் மாட்டு சந்தையினை இயக்க மாவட்ட ஆட்சியாளரக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதில் திப்பம்பட்டியில் உள்ள தனியார் இடத்தில் மாட்டுச்சந்தை இயங்கக்கூடாது என்று பொள்ளாச்சி சார் ஆட்சியர் அவர்களால் 01.07.2021 அன்று அனுமதி பேச்சுவார்த்தை நடத்தி பொள்ளாச்சி நகராட்சியில் தான் இயங்க அறிவுறுத்தியதன் பேரில் 06.07.2021 முதல் பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான மாட்டு சந்தைக்கு குறைந்த அளவிலான மாடுகள் வரப்பெறுகிறது. இந்நகராட்சியில் பணிபுரியும் இரண்டு பணியாளர்களை கொண்டு துறை மூலம் வசூல் பணி மேற்கொண்டதில் கீழ்கண்டவாறு தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நாள் | வசூல் தொகை ரூ |
|---|---|---|
| 1. | 06.07.2021 | 16,090/- |
| 2. | 08.07.2021 | 27,060/- |
| 3. | 13.07.2021 | 17,585/- |
| 4. | 16.07.2021 | 28,320/- |
| 5. | 20.07.2021 | 18,620/- |
| 6. | 22.07.2021 | 20,170/- |
| 7. | 27.07.2021 | 20,830/- |
| மொத்தம் | | 1,48,675/- |

மேற்காண் தொகையில் கடைசியாக 22.07.2021 மற்றும் 27.07.2021 (வாரம் இரண்டு முறை மட்டுமே செயல்படும்) வாரம் 41,000/வசூல் வீதம் மாதம் ரூ.1,64,000/- ஆண்டுக்கு 19,68,000 ஆகும் அதே போன்று ஆண்டுக்கு 52 வாரம் என கணக்கிடும்போது 21,32,000 வசூல் வர வாய்ப்பு ஏற்படும்.

மேற்காண்ட வருமானத்தில் இரண்டு பணியாளர்களுக்கு ஆண்டு ஊதியம் (கடை நிலை

பணியாளர் ஊதியத்தில்) 7,48,180/- கணக்கிடப்படுகிறது. இதுபோக டோக்கன் பிரிண்டிங் செலவு உத்தேசமாக ரூ.25,000/- மொத்தம் செலவு 7,73,380/- ஆகும்.

ஆகமொத்தம் மொத்த வருவாய் ரூ.21,32,000ல் செலவு ரூ.7,73,380/- உத்தேசமாக 7,74,000/- மீதம் 13,58,000/- மாட்டுசந்தையின் மூலம் வருவாய் ஆகும்.

இதுபோக மாட்டுச்சந்தையானது மொத்தம் 6.25 ஏக்கர் ஆகும். (நகரமைப்பு அலுவலரின் குறிப்பின்படி)

இதில் பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் சார்பால் 2.00 ஏக்கர் நிலப்பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 6.25 ஏக்கர் நிலப்பரப்பில் இருந்து இடமானது தற்சமயம் 4.25 ஏக்கர் இடமாக குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் மாட்டுசந்தை நுழைவு வாயில் வசூலிக்க 24.07.2019, 21.08.2019, 27.09.2019, 21.01.2020, 06.02.2020, 10.06.2020, 25.06.2020, 09.07.2020, 18.08.2020, 09,09,2020, 29.09.2020, 13.10.2020, 29.10.2020, 19.11.2020, 30.12.2020, 13.01.2020, 09.02.2021, 25.02.2021, 22.06.2021, 06.07.2021, 16.07.2021, 29.07.2021 22 முறை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 29.07.2021 அன்று இறுதியாக கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.ராமசாமி<br>S/Oபழனிசாமி<br>4,நியூ ஸ்கீம் வீதி<br>பொள்ளாச்சி | ரூ.32,00,009/- |
| 2. | திரு.கோ.ரவிச்சந்திரன்<br>S/O R.கோவிந்தராஜ்<br>3.37.ஆ.சங்கம்பாளையம்<br>மகாலிங்கபுரம்(போ)<br>பொள்ளாச்சி | ரூ.23,00,009/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தத்தில் வரிசை 1ல் உள்ள நபர் கொடுத்துள்ள தொகை ரூ.32,00,009/- நகராட்சிக்கு நல்ல ஒரு வருமானம் ஆகும், ஆதலால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 5035/2020/அ6)

**2965)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா கூடுதல் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 22.06.21ல் ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட ஒப்பந்தபுள்ளிகள் வரப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கடைசியாக ஏலம் போன தொகை ரூ.16,80,000/- ஆகும்

| வ. எண் | பெயர் | ஆண்டு குத்தகை தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.கோ.ரவிச்சந்திரன்<br>3/37 ஆ.சங்கம்பாளையம்<br>மகாலிங்கபுரம்,பொள்ளாச்சி | **10,81,001/-** |
| 2 | திரு R.பவின்<br>மலையப்ப கவுண்டன் காலனி,<br>ஆ.சங்கம்பாளையம்<br>மகாலிங்கபுரம்,பொள்ளாச்சி | **7,00,009/-** |

| | |
|---|---|
| | மேற்கண்டவாறு வரிசை எண் 1ல் உள்ள ரூ10,81,001/- க்கு 06.07.2021ல் நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் திரு.கோ.ரவிசந்திரன் என்பவர் மீண்டும் அதே தொகைக்கு ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்துள்ளார். இதற்கு பின்பு 2 முறை ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோர எவரும் முன்வரவில்லை மேலும் சுமார் 12 முறைக்கு மேல் ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரபட்டத்தில் எவரும் முன்வரவில்லை.<br>தற்சமயம் துறை மூலம் வதூலிக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு ரூ. 1600/- வீதம் ஆண்டிற்கு ரூ.5,84,000/- வருமானம் எதிர்ப்பார்க்கப்படுகிறது. அச்சுக்கூலி மற்றும் இரண்டு பணியாளர்களுக்கு ஊதியம் சுமார் ரூ.7,73,380/- செலவினம் மேற்கொள்ளப்படும் இதனை கணக்கிடும் போது வருவாயினை விட செலவினம் கூடுதலாக வரப்பெறும்.<br>எனவே நகராட்சிக்கு ஏற்படும் தொடர் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு திரு.கோ.ரவிசந்திரன் என்பவர் ஆண்டிற்கு ரூ.10,81,000/-க்கு கேட்டுள்ள ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 5035/2020/அ6 |
| **2966)** | இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி மார்க்கெட் சில்லறை வியாபார கடை எண்.109-ஐ 06.07.2021ல் நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஈஸ்வரி 1/37, புது வீதி, ராசிசெட்டிபாளையம், ஜமீன் ஊத்துக்குளி என்பவர் மாத வாடகை ரூ.4500/- ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இந்தக் கடை 2017-2018 ஆண்டு முதல் காலியாக உள்ளது. இந்த கட்டிடம் கட்டிய முதல் இது நாள் வரை பலமுறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஏலம் போகவில்லை. தற்போது ரூ.4500/- ஏலம் கோரியுள்ளார். அதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாவகையில் கடை உரிமத்தை ஈஸ்வரி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வழங்க வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1131/2020/அ6 |
| **2967)** | இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி மார்க்கெட் சில்லறை வியாபார கடை எண்.8-ஐ 06.07.2021ல் நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் A.சபரி, 1/258 கிழக்கு தோட்டம், கோவை ரோடு, ஆச்சிபட்டி, பொள்ளாச்சி மாத வாடகை தொகையாக ரூ.5750/- எடுத்துள்ளார். இந்த கடைக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட மாத வாடகை தொகை ரூ.5700/- இந்த கடை கடந்த 18 மாத காலமாக ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. தற்போது ஏற்கனவே எடுக்கப்பட்ட ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட ரூ.5750/- அதிகமாக உள்ளதால், இந்தக் கடை உரிமத்தை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 5035/2020/அ6 |
| **2968)** | இந்நகராட்சிக்குட்பட்ட பஜார் வணிக வளாக கடை எண். 7-ஐ 06.07.2021ல் நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் M.பழனிக்குமார், 18 சொர்ணபுரி நகர் பிரிவு, டி.கோட்டாம்பட்டி, பொள்ளாச்சி மாத வாடகை தொகையாக ரூ.7750/- எடுத்துள்ளார். இந்த கடை 2 வருட காலமாக காலியாக உள்ளது. ஏலம் எடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை. ஏற்கனவே இருந்த தொகை ரூ.6500/-ஐ விட அதிகமாக உள்ளதால், நிதியிழப்பு ஏதும் இல்லாத காரணத்தினால், இந்த கடை உரிமத்தை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1131/2020/அ6 |
| **2969)** | இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணா மத்திய பேருந்து நிலைய கடை எண் 11 க்கு 29.07.2021ல் நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தபுள்ளியில் திரு கண்ணன் என்பவர் உயர்ந்த ஏலமாக மாதவாடகை தொகை ரூ.23,500/-க்கு கோரியுள்ளார், இந்த கடை கடந்த 31.03.2020 ல் பூட்டி சீல் வைக்கப்பட்டதில் |

| | |
|---|---|
| | கடந்த 1வருடம் 4 மாதங்களாக காலியாகவே உள்ளது.<br>இந்த கடைக்கு 25.02.2021, ,22.06.2021, 06.07.2021, 16.07.2021 , 29.07.2021 ஆகிய தேதிகளில் ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் தற்போது திரு ரா.கண்ணன் 19/1 வெங்கடாபுரம், டீச்சர்ஸ் காலனி,உடுமலை ரோடு, பொள்ளாச்சி என்பவர் ரூ.23,500/- மாத வாடகை தொகை கோரியுள்ளார்.<br>நகர் மன்ற தீர்மான எண் 2494 ன்படி வாடகை மற்றும் வைப்புத்தொகை மறு நிர்ணயம் செய்யப்பட்டதில் கடை எண் 11 க்கு நிர்ணயம் செய்யப்பட்ட மாதவாடகை தொகை ரூ.20500/- ஆகும் தற்போது ஏலம்/ஒப்பந்தபுள்ளியில் வரப்பெற்ற மாத வாடகை தொகை ரூ.23500/- ஆகும் ஆகையால் இந்த கடை உரிமத்தினை திரு ரா.கண்ணன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1131/2020/அ6 |
| **2970)** | இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி மார்கெட் நிரந்தரமற்ற கட்டமைப்பு கொண்ட வெங்காயக் கடை எண் 53க்கு 29.07.2021ல் நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் K.G.ராதாகிருஷ்ணன், 27/51, மறைமலைஅடிகள் நகர், பீளமேடு புதூர், கோவை என்பவர் மாத வாடகைத் தொகையாக ரூ.9950/-க்கு ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட இனத்திற்கு இரண்டு முறை ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது இந்நகரமன்ற தீர்மான எண் 2492, நாள்-27.11.2020 சதுரடிக்கு ரூ.6/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.கடை எண் 53 க்கு ரூ.1250/-க்கு ரூ.7500/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் அதை விட கூடுதலாக உள்ளதால் திரு. K.G.ராதாகிருஷ்ணன் என்பவருக்கு மாதவாடகை ரூ.9950/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1131/2020/அ6 |
| **2971)** | இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி மார்கெட் நிரந்தரமற்ற கட்டமைப்பு கொண்ட வெங்காயக் கடை எண் 40Aஐ 29.072021ல் நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் N.கதிர்வேல், 74 LIG காலணி, மகாலிங்கபுரம்,பொள்ளாச்சி என்பவர் கலந்து கொண்டு மாதவாடகை தொகை ரூ.2900/- க்கு ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளார் .மேற்கண்ட கடை 450 சதுரடி ஆகும் இந்நகர்மன்ற தீர்மான எண் 2492, நாள் 27.11.2020ல் சதுரடிக்கு ரூ.6/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.அதன்படி அரசு மதிப்பு ரூ.2700/- ஆகும் திரு N.கதிர்வேல் என்பவர் ரூ.2900/-க்கு ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளதாலும் இரண்டுமுறை ஒப்பந்தபுள்ளி கோரியதில் ரூ.2900/- க்கான ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1131/2020/அ6<br>(ந.க.எண். 1131/2020/அ6) |
| **2972)** | இந்நகைராட்சிக்கு சொந்தமான உடுமலைப்பேட்டை சாலை, நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இருசக்கர வாகனம் நிறுத்தும் கட்டண உரிமம் பெற்று வந்த குத்தகைதாரர் திரு.பூபாலன், என்பவர் குத்தகை காலம் முடிவுற்றதால் அன்னார் செலுத்திய முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். திரு.பூபால்ன் அவர்கள் செலுத்திய தொகை ரூ.3,38,338/-ம் 2012-2013ம் ஆண்டு செலுத்தப்பட்டுள்ளதால் அன்னார் செலுத்தப்பட்ட தொகை ரூ.3,38,338/-ம் ப.எண்.05ல் கடந்த கால வைப்பு நிதி பதிவேட்டில் கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.3,38,338/-ல் ரூ.5,000/-ஐ தணிக்கை மற்றும் சேவை வரிக்காக ரூ.27,799/- மொத்தம் ரூ.32,799/- பிடித்தம் செய்து மீதி தொகை ரூ.3,05,539/-னை திரு.பூபாலன் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | ந.க.எண்.2548/2020/பி4 |
| 2973) | பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதிகளில் திறந்த வெளியில் மலம் கழித்தல், திடக்கழிவுகளை குறைத்திடுதல், கழிவுகளை மறுசுழற்சி செய்தல் மற்றும் கழிவுகளை உற்பத்தியாகும் இடத்திலேயே உரம் தயார் செய்தல் போன்றவைகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளுக்கு வெளிக்கொணர்வு மூலம் பணியமர்த்தப்பட்ட 9 பரப்புரையாளர்கள் மற்றும் 2 மேற்பார்வையாளர்களின் ஒப்பந்த காலம் 30.06.2021-வுடன் முடிவடைந்தது. மேற்படி அவர்களுக்கான புதிய ஒப்பந்தம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியாணையில் பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட தூய்மை பாரத திட்டத்தின் கீழ் IEC பணிகளை மேற்கொள்ள திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் அவர்களுக்கு ஆறுமாத காலத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு அந்நிறுவனம் மூலம் 9 பரப்புரையாளர்கள் மற்றும் 2 மேற்பார்வையாளர்களை பணியமர்த்தப்பட்டுள்ளனர் எனவே பணியாளர்களை 16/07/2021 முதல் 15/01/2022 வரை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்தவும் அவர்களுக்கான ஊதியத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும், அரசிடமிருந்து நிதி பெற்றவுடன் ஈடு செய்து கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம். |
| 2974) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்: 4-ல் அமையும் சர்வே வார்டு: D, பிளாக் எண்: 1, நகரளவு எண்: 1355-ல் 0.39½ ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு உபயோக மனைப்பிரிவு அமைப்பிற்கு அனுமதி கோரி, மனுதாரர் திரு.K.சதீஸ்குமார் என்பவரால் இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோவை அவர்களுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதில் சாலை அமைப்பு வரைபடத்திற்கு ந.க.எண்: 3669/2020/கோ.மா. நாள்.11.12.2020-ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.<br>மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவுக்கான சாலை அமைப்பு வரைபடத்தின்படி உத்தேசிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலை, மனைப்பிரிவு சாலை விஸ்தரிப்பு மற்றும் பொது ஒதுக்கீடு ஆகிய இடங்களை தானபத்திரம் எண்: 4337/2021 நாள்.08.04.2021ன்படி ஏற்கனவே தானமாக பெறப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மேற்கண்ட மனைப்பிரிவில் குடிநீர் பகிர்மானக்குழாய் வடிகால், சிறுபாலம் மற்றும் தெருவிளக்கு ஆகியவை மனுதாரர் சொந்த பொறுப்பில் பணி மேற்கொண்டதாக 19.03.2021ம் தேதிய உதவிப்பொறியர் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளார்.<br>2. மேற்கண்ட மனைப்பிரிவில உள்ள சாலையில் தெருவிளக்கு அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சாரவாரியத்தில், ரூ.11,650/-ஐ செலுத்தியுள்ளார். (ரசீது எண்: 387-12/20-1219 நாள்.30.12.2020)<br>3. எனவே, மேற்கண்ட மனைப்பிரிவில் சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு சாலை, சாலை விஸ்தரிப்பு மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சி பராமரிப்பிற்கு தானசாசனம் மூலம் பெற்றுக்கொண்டதை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>ந.க.எண்: 5738/2020/ஜி1 |
| 2975) | மாண்பமை, சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு W.P.No: 3995/2019 மற்றும் Contempt Pettition no: 22/2021-ன் படி உயர்நீதிமன்றம் மூலம் நியமிக்கப்பட்ட Advocate Commissioner திரு.A.V.ஆறுமுகம் அவர்களை நேராய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க 01.04.2021ம் தேதிய உத்திரவில் நியமனம் செய்யப்பட்டது. |

| | |
|---|---|
| | அதன்படி மேற்படி வழக்கறிஞர் கடந்த 16.04.2021ம் தேதியன்று ஆய்வு செய்தும் அதன் பின்னர் 24.07.2021 மற்றும் 25.07.2021 ஆகிய தேதிகளில் பொள்ளாச்சி நகராட்சி உட்பட்ட மகாலிங்கபுரம் பகுதியில் உள்ள மனைப்பிரிவு பகுதிகள் மற்றும் புதிய திட்ட சாலை ஆகிய இடங்களில் உள்ள அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்களை ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டதன்படி வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் உள்ள வணிகக் கட்டிடங்களை Advocate Commissioner ஆய்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் நிலையில் உள்ள கட்டிடங்கள், கட்டிட வரைபடங்கள் (A-3 அளவில்) ஆகியவற்றினை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தேவைப்படுவதாகவும் வழக்கறிஞர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்படி பணிகள் மேற்கொள்ள உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு பணி மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:1498/2017/ஜி1 |
| 2976) | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.4 சொர்ணபுஷ்பம் காலனியில் மழைநீர் வடிகால் பழுதடைந்து கழிவுநீர் சாலையில் தேங்கி சுகாதார கேடு ஏற்பட்டு நோய் பரவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் புதிதாக மழைநீர் வடிகால் அமைப்பதற்கு ரூ.3.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2977) | பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் குடிநீர் சுத்திகரிப்பிற்கான Alum ஓராண்டு தேவைக்கு விநியோகித்தல் பணிக்கு ரூ9.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.07.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br>1. M/s.B&G Construction, Mettur. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.17% குறைவு.<br>2. M/s.Mahalakshmi Constructions, Coimbatore. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 6.51% அதிகம்.<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.17% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.B&G Construction, Mettur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br>2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.17% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.B&G Construction, Mettur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2730/2021/இ1 |

| | |
|---|---|
| **2978)** | பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோக திட்டத்தில் நகராட்சி லாரி மற்றும் தனியார் லாரி மூலம் குடிநீர் வழங்க கட்டணம் நிர்ணயம் செய்து பல வருடங்கள் ஆகிவிட்டதாலும், தற்போது அதிகரித்துள்ள எரிபொருள் செலவினம், வாகனம் பராமரிப்பு செலவினம் மற்றும் மின் கட்டணத்திற்கு ஏற்ப கீழ்க்கண்ட விவரப்படி கட்டணங்களை வசூல் செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>தற்போது இருக்கும் வீதம்:<br>1 நகராட்சி லாரி மூலம் வழங்கும் குடிநீர் கட்டணம் : ரூ.800/10,000 Lts<br>2 தனியார் லாரி மூலம் வழங்கும் குடிநீர் கட்டணம் : ரூ.500/10,000 Lts<br>3 தனியார் லாரி மூலம் வழங்கும் குடிநீர் கட்டணம் : ரூ.250/5,000 Lts<br><br>மாற்றப்பட வேண்டிய வீதம்;<br>1 நகராட்சி லாரி மூலம் வழங்கும் குடிநீர் கட்டணம் : ரூ.1600/10,000 Lts<br>2 தனியார் லாரி மூலம் வழங்கும் குடிநீர் கட்டணம் : ரூ.1000/10,000 Lts<br>3 தனியார் லாரி மூலம் வழங்கும் குடிநீர் கட்டணம் : ரூ.500/5000 Lts<br><br><u>அலுவலகக்குறிப்பு</u>:<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.5933/2011/இ3 |
| **2979)** | பார்வையில் காணும் பொள்ளாச்சி நகராட்சி குழாய் பொருத்துனர் அவர்களின் கடித நகலில் பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும், இதற்காக அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பிரதான குழாய்கள் மூலமாக தண்ணீர் நீர் உந்து செய்யப்பட்டு, அதன் மூலம் மார்க்கெட் சாலை பூஸ்டர் நிலையத்திற்கு வந்தடைகிறது என்றும், அதன்பிறகு நகராட்சி எல்லைக்குட்பட்ட பல பகுதிகளில் அமைந்துள்ள 9 மேல் மேல்நிலைத் தொட்டிகளுக்கு குழாய்கள் மூலமாக குடிநீர் ஏற்றப்பட்டு, விநியோகம் செய்யப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்கள்.<br>மேலும். நீர் உந்து குழாய்கள் அமைக்கப்பட்டு பல வருடங்களுக்கு மேல் ஆவதால், பல இடங்களில் அவ்வப்போது உடைப்புகள் ஏற்படுவதால், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்வதில் சிரமங்கள் ஏற்படுகிறது எனவும், சீரான குடிநீர் விநியோகத்தைக் கருத்தில் கொண்டும் குழாய் உடைப்புகளை உடனே சரி செய்ய வேண்டியுள்ளது எனவும் அதற்கு தேவையான குழாய்கள் மற்றும் இதர உபகரணங்கள் தேவைப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்கள்.<br>எனவே குழாய்கள் மற்றும் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.80 இலட்சம் ஆகும்.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u>:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.3105 / 2011 /இ1 |
| **2980)** | நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கோவை வால்பாறை சாலைக்கு மேற்கு பகுதியில் உள்ள 18 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், குடிநீர் விநியோகம் செய்ய உபயோகப்படுத்தப்படும் மதகுகளிலும் (வால்வு) ஏற்படும் குடிநீர் |

கசிவுகளையும் பொதுக்குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், மேலும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள், கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும் முறையே பராமரிப்பு செய்வதற்கும் தேவையான உபகரணங்கள் விநியோம் செய்வதற்கும் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்திட உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.10.00 இலட்சம் ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**2981)** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட 16-வது வார்டுக்குட்பட்ட சுப்ரமணிய சுவாமி கோயில் வீதியிலுள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலமானது சேதமடைந்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. மேலும், மழைக்காலங்களில் மழைநீர் வெளியேற வழியில்லாமல் தேங்குவதால் அந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மிகவும் இன்னலுக்கு ஆளாகின்றனர். எனவே மேற்கண்ட மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களை சீரமைப்பதற்கு ரூ.10.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.3016/2021/இ1**

**2982)** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட SR லே அவுட் பகுதியில் ஏற்கனவே உள்ள சிறுபாலமானது சேதமடைந்து மிகவும் மோசமான நிலையில் பொதுமக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் மிகவும் இடையூறாக உள்ளது. இந்நிலையில் மேற்கண்ட சிதலமடைந்துள்ள சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.3017/2021/இ1**

**2983)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகர கூட்டுறவு கட்டிட சங்கத்திற்கு சொந்தமான வெங்கடேசா காலனியில் அமைந்துள்ள தந்தை பெரியார் மாளிகை வணிக வளாகத்தில் அருகே மே பிளவர் மரம் சாய்ந்து கீழே விழும் நிலையில் உள்ளது. இதனால் போக்குவரத்திற்கு பெரிதும் இடையூராகவே உள்ளது.

| வ.எண் | இடம் | மரத்தின் வகை | எண்ணம் |
|---|---|---|---|
| 1 | வெங்கடேசா காலனியில் மரம் கீழே விழும் நிலையில் உள்ளது. | மே பிளவர் மரம் | 1 எண்ணம் |

மேற்காணும் மரத்தினை பொது மக்களின் நலன் கருதி எவ்வித இடையூறும் இல்லாமல் வெட்டி

அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.3150/2021/இ2**

**2984)** பொள்ளாச்சி நகராட்சியின் பொறியர் பயன்பாட்டிற்கான TN 41 T 2983 ஈப்பு வாகனத்தின் பேட்டரி மற்றும் மோட்டார் பழுதடைந்துள்ளது. இதற்கு புதிய பேட்டரி மற்றும் செல்ப் மோட்டார் பொருத்தி ஆயில் சர்வீஸ் மற்றும் பழுதுபணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியினை மேற்கொள்ளவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3063/2021/இ1**

**2985)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான மார்க்கெட் ரோட்டிலுள்ள மாட்டுச்சந்தை வளாகத்தில் தேவையில்லாமல் கொட்டப்பட்டுள்ள மேடுகளை அகற்றி விட்டு வாகனங்கள் செல்ல மேடு பள்ளங்களை சீரமைத்தல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி விதிகள் 1920 பிரிவு 15-ன் கீழ் பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ,<br>11/31, தந்தை பெரியார் வீதி,<br>பல்லடம் ரோடு,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 0.46% குறைவு. |
| 2 | திருவாளர்கள்: கே.ஆர்.காளிதாஸ்அன் கோ,<br>5, சக்தி கார்டன்,<br>பாலக்காடு ரோடு,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 1.55% அதிகம். |
| 3 | திரு.A.சதீஸ்குமார்,<br>9/2, மதுரை வீரன் கோவில் வீதி,<br>டி.கோட்டாம்பட்டி,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 2.32% அதிகம். |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மற்றதை விட குறைவாகவும் மதிப்பீட்டு விலையை விட 0.46% குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 3015/2021/இ1**

**2986)** பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.20-ல் பழைய இரும்பு மார்க்கெட் பகுதியில் கொரோனா (COVID-19) நோயினால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க நகராட்சியில் உள்ள பொருட்களைக் கொண்டு தடுப்புகள் உடனடியாக அமைக்க உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.25,000/- ஆகும். இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையினை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் செய்வதற்கும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களிடம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்கள். கே.ஆர்.காளிதாஸ் அன் கோ அவர்கள் மூலம் மதிப்பீட்டு விலைக்கே செய்து முடிக்க பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920-பிரிவு 15-ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் பதிவு செய்யலாம்

**2987)** நகராட்சிக்கு சொந்தமான ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்திற்குள் உள்ள இரும்பு சேர், டேபிள், டெஸ்க் ஆகியவற்றை பழைய இரும்பு வியாபாரிகள் மூலம் எடை நிர்ணயம் செய்யும் மெஷின் மூலம் மொத்த எடை மற்றும் நிர்ணயம் செய்யும் பொருட்டு விலைப்புள்ளி பெறப்பட்டது.

மேற்கண்ட பள்ளி வளாகத்திற்குள்ளேயே எடை நிர்ணயம் செய்யப்பட்டது. அதில் 585 கிலோ கிராம் முதல் தரமாகவும், 1015 கிலோ இரண்டாவது தரமாகவும் எடை நிர்ணயம் செய்யப்பட்டது.

மேற்கண்ட பழுதடைந்த பொருட்களின் சந்தை மதிப்பிற்கான விலைப்புள்ளி பெற்றதில் இன்றைய அதிகபட்ச சந்தை மதிப்பு ரூ.27940/- ஆகும். (ரூபாய் இருபத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) மேற்காணும் பொருட்களை பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 4515/2020/இ1

**2988)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்திலிருந்து செல்லும் நீரேற்று குழாய் 450 mm CI உடைப்பு ஏற்பட்டதை சரிசெய்யும் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி விதிகள் 1920 பிரிவு 15-ன் கீழ் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.R.சுப்ரமணியம்,<br>103, நல்லப்பா நகர்,<br>மகாலிங்கபுரம்,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 0.30% அதிகம். |
| 2 | திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ,<br>11/31, தந்தை பெரியார் வீதி,<br>பல்லடம் ரோடு,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 2.32% குறைவு. |
| 3 | திருவாளர்கள்: கே.ஆர்.காளிதாஸ்அன் கோ,<br>5, சக்தி கார்டன், | மதிப்பீட்டு விலையை விட 2.45% அதிகம். |

| | |
|---|---|
| | <table><tr><td></td><td>பாலக்காடு ரோடு,<br>பொள்ளாச்சி.</td><td></td></tr></table><br>வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மற்றதை விட குறைவாகவும் மதிப்பீட்டு விலையை விட 0.30% குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள திரு.R.சுப்ரமணியம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண். 2842 /2021/இ1** |
| **2989)** | பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் விநியோகத்தில் தலைமை நீரேற்ற நிலையம், நீர் உந்து நிலையம், 8 எண்ணம் நீர் தேக்க வளாகங்களில் காவல் பணிபுரிய தேவையான பணியாட்கள் தறசமயம் போதிய அளவில் இல்லாததால் மேற்காண் இடங்களில் காவலர் பணிபுரிய தேவையான காவலர்கள் பணியாட்களை வெளியாட்களிடம் ஒப்படைத்தல் (Outsourcing) முறையில் ஒடப்பந்தப்புள்ளி வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின் செயல்முறை ஆணை எண்.7457/2020/இ3 நாள்.20.09.2020-ன் படி நிர்ணயிக்கப்பட்ட கூலி அடிப்படையில் ரூ.22.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு 23.12.2020 ஆம் தேதியன்று M/S.Green Dream, Pollachi அவர்களுக்கு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டது,<br>அதுசமயம் இப்பணிக்கு அனுமதி பெறப்பட்ட தொகை ரூ.22.60 இலட்சம் 10.05.2021 வரையில் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலுள்ளதினை கருத்தில் கொண்டு கொரோனா-19 நோய் தொற்று பரவல் காரணமாக பொதுமுடக்கம் ஏற்படும் சூழ்நிலை உள்ளதை கருதி அவசர காலத்தில் உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோர இயலாததால் பொதுமக்களின் அத்தியாவசிய வாழ்வாதார குடிநீர் பாதுகாப்பு பணியின் அவசியம் கருதி 31.05.2021-ல் இப்பணிக்கான காவலர்களை மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த அடிப்படையிலேயே பயன்படுத்திக் கொள்ள காலநீட்டிப்பு செய்து ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி பெறப்பட்டது.<br>அதன்பின் இப்பணியின் அத்தியாவசியம் கருதி முன் எச்சரிக்கை நடவடிக்கையாக 01.06.2021-ன் பின் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளும் பொருட்டு 06.05.2021-ல் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனை அடுத்து 10.05.2021-ல் கோவிட்-19 நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கை காரணமாக தமிழக அரசு தளர்வுகளற்ற பொதுமுடக்கம் அறிவிப்பு வெளியிடப்பட்டது.<br>எனவே இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டதற்குப்பின் தளர்வுகளற்ற பொதுஊரடங்கு அறிவிப்பினை அறிவித்ததால் இப்பணிக்கான தகுதி வாய்ந்த முறையான ஒப்பந்தப்புள்ளி கிடைக்கப்பெறும் வாய்ப்புகள் குறைவாக உள்ளதன் அடிப்படையில் பொதுமக்களின் நலன் கருதி மேலும் இப்பணிக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு அதே ஒப்பந்ததாரருக்கு நீடிப்பு செய்து அனுமதி பெறப்பட்டது. இரண்டுமுறை அனுமதி பெறப்பட்ட தொகை மொத்தம் ரூ.8.00 இலட்சத்திற்கு (நகர்மன்ற தீர்மான எண்.2894/ 31.05.2021) ல் 11.05.2021 ஆம் தேதியில் மன்றத்திற்கு முன் அனுமதி பெறப்பட்டது. மேற்கண்டவாறு 26.05.2021-ல் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 27.05.2021-ல் திறக்கப்பட்ட 5 ஒப்பந்தப்புள்ளிகளை கலந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகள் எதும் கிடைக்கப்பெறவில்லை.<br>மேலும் இப்பணிக்கான மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு 27.05.2021-ல் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டது. தமிழக அரசு கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கம் நீட்டிப்பு செய்து அறிவிப்பு வெளியிட்டமையாலும் கோவை மாவட்டத்தில் அதிக தொற்ற உள்ளதனை கருத்தில் கொண்டு பொது போக்குவரத்து, வணிகம் ஆகியவற்றினை முற்றிலும் நிறுத்தப்பட்டது. ஆகையால் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவது நிலுவையில் வைக்கப்பட்டது.<br><br>மேற்காணும் பணிக்கு கூடுதல் அனுமதி பெறப்பட்ட தொகை ரூ.8.00 இலட்சத்தில் மேற்குறிப்பிட்ட பொது முடக்கம் காரணமாக பணியாட்கள் வருகை குறைவாக இருந்ததால் மீதமான |

| | |
|---|---|
| | தொகையினை எதிர்வரும் 31.07.2021 வரையில் பயன்படுத்தி கொள்வதாக கணக்கிடப்பட்டது. எனவே, தற்சமயம் தளர்வுகளுடன் போக்குவரத்து வசதியுடன் வணிகங்கள் நடத்தவும் அறிவிப்பு வெளியிடப்பட்டதால் இப்பணிக்கு தகதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்யும் பொருட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. இக்குடிநீர் வினியோக வளாகங்களின் பாதுகாப்பு பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 5646/2020/இ1 |
| **2990)** | பொள்ளாச்சி நகராட்சியின் குடிநீர் விநியோகத்திற்கு அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழியாற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு நீரேற்றம் செய்யப்படுகிறது. இதில் 1974-ல் அமைக்கப்பட்ட கிளாரிபயர் (Clariflocculator) மற்றும் வடிநீர் தொட்டிகள் (Filter beds) மூலம் ஆற்று நீர் சுத்திகரிக்கப்பட்டுவதின் கழிவுநீர் குழாய்கள் மூலம் சேகரிப்பு தொட்டிக்கு வந்து, பின் பிரதான குழாய் வழியாக வெளியேற்றப்படுகிறது. இந்த சேகரிப்பு தொட்டியின் அடிபாகம் மற்றும் சுற்று பக்கவாட்டு பகுதிகளில் உள்ள சிமெண்ட் தளம் சிதலமடைந்துள்ளதால் அதிக அழுத்தத்துடன் வெளியேறும் நீரினால் தொட்டியின் கீழ்பகுதியில் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் தொட்டி மிகவும் பலவீனமடைந்து, இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேலும் மண் அரிப்பு ஏற்படும் போது கல் மற்றம் மண் வெளியேறும் பிரதான குழாயில் செல்லும் போது அடைப்புகள் ஏற்படுகிறது. மேலும் குளாரின் கலந்த நீர், சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீர் தொட்டிகளுக்கு செல்லும் குழாயில் ஆங்காங்கே உடைந்துள்ளது எனவே சிதலமடைந்த தொட்டியினை புதுப்பிக்கவும் குளோரின் நீர் செல்லும் குழாயினை புதிய குழாய்கள் கொண்டு சீர் செய்திடவும் அவசியம் வேண்டியுள்ளது. இப்பணியை மேற்கொள்வதற்கும், இதற்கான மதிப்பீடு ரூ.6.90 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனமதி பெற்ற மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| **2991)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான மாட்டுச்சந்தை வளாகம் மார்க்கெட் ரோட்டில் செயல்பட்டு வருகிறது.<br>மாட்டுச் சந்தை வளாகத்தின் மூலமாக நகராட்சி வருமானத்தைப் பெருக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.<br>மாட்டுச்சந்தை வளாகம் செயல்படும் வளாகத்தின் ஒரு பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிக்குண்டான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இடம் ஒதுக்கப்பட்டு, பணி நடைபெறுவதால் மாட்டுச்சந்தை வளாகத்திற்கு வரும் வாகனங்களால் நெரிசல்கள் ஏற்படுகின்றன.<br>ஆதலால் மாட்டுச்சந்தைக்கு, வரும் வாகனங்கள் எளிதாக செல்லும் வகையிலும், நெரிசல் ஏற்படாமல் இருக்கும் பொருட்டும் மாற்று வழிப்பாதைகள் உருவாக்க வேண்டியுள்ளது.<br>தற்போது நகராட்சி மூலமாக உரம் தயாரிக்கும் கூடம் மாட்டுச் சந்தை வளாகத்தை ஒட்டியே உள்ளது. இந்த இரண்டுக்கும் இடையே உள்ள சுற்றுச்சுவற்றை இடித்தும், அதன் முகப்பிலுள்ள கேட்டை அகற்றி மாற்று இடத்தில் அமைத்து நகராட்சிப் பணியாளர்கள் மட்டும் சென்று வருவதற்கும், MCC சுற்றிலும் கம்பிவேலி மற்றும் அழகாபுரி பள்ளியை சுற்றிலும் கம்பிவேலிகளும் அமைக்க வேண்டியுள்ளது.<br>மேலும் சந்தைக்கு வந்து போகும் வியாபாரிகள் கருத்துக் கேட்பின் அடிப்படையிலும் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.4.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதிப் பெற்று மேல் நடவடிக்கை |

| | |
|---|---|
| | மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2992) | பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு பகுதியிலுள்ள 18 வார்டுகளில் உள்ள கிணற்றுநீர் மற்றும் குடிநீர் பகிர்மானக்குழாய்கள், விநியோகக்குழாய்கள், பொதுக்குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகள், நீர்க்கசிவுகளை சரிசெய்தல் பணி பணிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 08.07.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br><br>1. M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.14% குறைவு.<br>2. திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.89% அதிகம்.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.14% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br>2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.14% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 0421/2021/இ1 |
| 2993) | பொள்ளாச்சி நகராட்சியில் பொறியியல் பிரிவில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மின்னனு முறையில் (E-Tender) ஒப்பந்தப்புள்ளிகளை பதிவேற்றம் செய்யவும் மின்னனு முறையில் வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளை திறக்கவும் மூன்று (3) DSC கார்டுகள் தேவை என்று நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெறும் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் பதிவேற்றம் மற்றும் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளை திறக்க மின் கண்காணிப்பாளர் திரு.D.சீமோன் முத்துராஜ் மற்றும் வரைவாளர் திரு.ஆர்.தர்மராஜன் அவர்களின் பெயரில் DSC கார்டுகளை பெறுவதற்கு செலவினம் ரூ.9000/- ஆகும். மேற்காண் DSC கார்டுகளை பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காண் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெற வேண்டியதன் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று DSC கார்டுகளை பெற நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். |
| 2994) | பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் பல்வேறு திட்டங்களின் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், ஜோதி நகரில் பூங்கா அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. மேற்காண் பணிகள் நடைபெறும் இடங்களை அவ்வப்போது பார்வையிட வேண்டி உள்ளது. பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிகளும் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருவதாலும் அரசின் மூலம் அவ்வப்போது செயல்படுத்த வேண்டிய திட்டப்பணிகளை பார்வையிட வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளை பார்வையிட ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) தொழில்நுட்ப உதவியாளர்களாக Technical Assistant Grade-I [சிவில் பட்ட படிப்பு தேர்ச்சி (B.E Passed)] 1 நபர், Technical Assistant Grade-II [சிவில் பட்ட படிப்பு |

| | |
|---|---|
| | தோல்வி (B.E Failed) மற்றும் சிவில் பட்டயபடிப்பு தேர்ச்சி (Diploma Passed)] 1 நபர், Technical Assistant Grade-III [சிவில் பட்டயபடிப்பு தோல்வி (Diploma Failed) மற்றும் தொழில்பயிற்சி படிப்பு தேர்ச்சி (ITI – Passed)] 2 நபர்களை நியமிக்க வேண்டியுள்ளது. மேற்காண் பணியாளர்களை 180 நாட்களுக்கு வைத்துக்கொள்ள தமிழ்நாடு பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை பட்டியல் (Schedule of Rates 2020-21)–ன் படி ESI, EPF மற்றும் Insurance உடன் சேர்த்து ரூ.7,70,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காண் மதிப்பீட்டு தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 3456/2021/இ1 |